**மத்திய இளநிலைக் கல்விக் கழகம்.**

**விடைத்தாள் மதிப்பீட்டு வழிகாட்டி-2022**

**மொத்த மதிப்பெண்கள்; 40** **006- தமிழ்**

1. பதினான்கு மதிப்பெண்களுக்கு(14) கீழே பெறக்கூடிய விடைத்தாள்கள் தலைமைத் தேர்வாளரின் ஒப்புதலுக்கு பிறகே பதிவு செய்ய வேண்டும்.
2. மதிப்பெண்கள் விடைத்தாளின் வலப்பக்கத்திலும், மொத்த மதிப்பெண்கள் விடைத்தாளின் இடப்பக்கத்திலும் வட்டத்திற்குள் தெளிவாக எழுதுதல் வேண்டும்.
3. விடைத்தாளின் இறுதியில் தேர்வாளரின் கையொப்பம், எண், மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் குறிக்கப்பட வேண்டும்.
4. பெற்ற மொத்த மதிப்பெண்களை வட்டமிடுக.
5. புள்ளி விவரங்களுக்காக ஒவ்வொரு நாளும் மதிப்பீடு செய்யும் விடைத்தாள்களின் மதிப்பெண்களை மட்டும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.
6. கடிதம், சுருக்கி வரைதல் ஆகியவற்றிற்கு ஒட்டு மொத்தமாக மதிப்பெண்கள் வழங்காமல் அவ்வப்பகுதிகளுக்குத் தனித்தனி மதிப்பெண்கள் வழங்கியபின் இறுதியாக (வட்டத்திற்குள்) மொத்த மதிப்பெண்கள் வழங்க வேண்டும்.
7. இலக்கண விடைகள் சரியாக இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.
8. செய்யுள் பகுதியில் தகுதி வாய்ந்த சரியான விடைகளுக்கு பிழையற இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.
9. உரைநடை விடைகள் பிழையற இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.
10. துணைப்பாடம் கதை அமைப்பு மாறாமலும், சிறந்த நடையுடனும் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.
11. சுருக்கி வரைதலுக்கு முழு மதிப்பெண் வழங்கலாம்.
12. கடிதம் உரிய வடிவமைப்பு முறையில் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.

**அதிகபட்ச மதிப்பெண் 40/40 உரிய பிழையற்ற விடைத்தாளுக்கு மட்டுமே வழங்க வேண்டும்.**

## I. இலக்கண வினாக்களுக்கான விடைகள்; (4 X 2 = 8)

(1) இடம் மூன்று வகைப்படும் அவை தன்மை, முன்னிலை, படர்க்கை

(2) இலக்கணமுறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

(3) அறிவினா, அறியா வினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா

(4) சுட்டு விடை, மறை விடை, நேர் விடை.

(5) செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ, மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்குப் பொருள்கோள் என்று பெயர்.

(6) காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை.

(7) முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை

## II. செய்யுள் வினாக்களுக்கு உரிய விடைகள்; (3×3=9)

(8) மருத்துவர் புண்ணைக் கத்தியால் சுடுதல்- நன்மைக்கே என்று நோயாளி உணர்தல்- இறைவன் நீங்காத துன்பத்தைத் தந்தாலும் இறை அருளை எதிர்பார்த்து வாழ்தல்.

(9) சதம் என்றால் நூறு என்று பொருள். ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம்.

(10) குழந்தையின் தலை 5-6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும். இப்பருவத்தைச் செங்கீரைப்பருவம் என்பர். இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒருகாலினை மடக்கி,மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகமசைந்தும் ஆடும்.

(11) வறுமை இல்லை, போர் புரிபவர் இல்லை, பொய்மொழி பேசுபவர் இல்லை, அறியாமை இல்லை அத்தகைய வளமும், பெருமையும் கொண்டது கோசல நாடு.

(12) துணிவு இல்லாதவராய், அறிய வேண்டியவற்றை அறியாதவராய். பொருந்தும் பண்பு இல்லாதவராய், பிறருக்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்படுவர்.

**III. உரைநடை வினாக்களுக்கு உரிய விடைகள்; (2×2=4)**

(13) மென்பொருள் இவ்வுலகை ஆண்டு கொண்டிருக்கிறது.
இனிமேல் செயற்கை நுண்ணறிவுதான் ஆளப்போகிறது.
சமூக ஊடகங்கள் வழியாகவும் மின்னணுச் சந்தை மூலமாகவும் செயற்கை நுண்ணறிவு கொஞ்சம் கொஞ்சமாக நம்மிடம் வந்து சேரத் தொடங்கிவிட்டது.
சமூக ஊடகங்களில் நீங்கள் பார்க்கிற ஒவ்வொன்றையும் தேடுபொறிகளில் தேடிக் கிடைக்கும் விடைகளையும் செயற்கை நுண்ணறிவு தீர்மானிக்கும்.

(14) ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்கிறார் மணவை முஸ்தபா.

(15) மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய மாவட்டங்கள்.

(16) தோலில் செய்த வெட்டு வரைபடங்களை விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி, கதைக்கேற்ப மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைத்துக்காட்டி, உரையாடியும் பாடியும் காட்டுவது தோற்பாவைக் கூத்து எனப்படும்.

**IV. விரிவான உரைநடை வினாவிற்கான விடைகள்; (1×5=5)**

(17) செயற்கை நூண்ணறிவு கொண்ட கணினி- அது தானாகக் கற்றுக்கொள்ளக்கூடியது. புதிய புதிய சூழ்நலைகளில் மனிதரைப் போல, தானே முடிவெடுக்கும் திறனுடையது- தேவைப்படும் இடங்களில், தேவைப்படும் நேரங்களில் செயல்படுத்தும்.

மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப்போல நம்முடன் உரையாடி, சில உதவிகள் செய்கின்றது. தொலைபேசி அழைப்பு, கட்டளையேற்று செயலியைத் திறத்தல், நாம் கேட்பதை உலாவியில் தேடுதல்.
இயந்திர மனிதன்- குழந்தையைப் பார்த்துக் கொள்ளுதல்- வயதானவர்களுக்கு உதவிகள் செய்தல் – மனிதர் செய்ய இயலாத அலுப்புத் தட்டக்கூடிய, கடினமான செயல்களைச் செய்தல்- மனிதர் அளிக்கும் சேவைகளை இயந்திர மனிதன் செய்தல்.

(18) உலகப்போரின் போது அமெரிக்கா குண்டு வீசப்படும் என்ற செய்தி- அதற்கு ஜப்பான் 'மொகு சாஸ்ட்டு;' என்று விடை- பொருள் தெரியாமையால் குண்டுவீசியது- அந்தத் தொடருக்குப் பொருள் விடை தர அவகாசம் வேண்டும்-அதற்கு அமெரிக்கர்கள் மறுக்கிறோம் என்று பொருள் கொண்டது. மொழிபெயர்ப்புச் சரியாக

அமையாததால் காலத்திற்கும் அழிவு தரும் களங்கம் நேர்ந்தது எனலாம்.

V. துணைப் பாடப்பொருண்மை [1×5=5]

(19) ஸ்டீபன் ஹாக்கிங்கின் தோற்றம்- கருந்துளை பற்றிய ஸ்டீபன் ஹாக்கிங்கின் கருத்து-ஹாக்கிங் கதிர்வீச்சு- அறிவியல் கோட்பாடுகள்- ஸ்டீபன் ஹாக்கிங் பெற்ற விருதுகள்

(20)அழகு கண்ட காட்சி- அனுமார் பாய்ச்சல்- அழகின் அனுமார் ஆட்டம் .

(21)மேரியின் குடும்ப நிலை- மேரிக்குப் பிடித்த சூழல்- மேரியின் விருப்பம்- மேரிஜேன் பெற்ற கல்வி- பட்டமளிப்பு விழா.

VI. **மூன்றில் ஒரு பங்காகச்சுருக்கி வரைதல்.** [1×4=4]

22. திருந்தாப் படிவம்- 1
திருந்திய படிவம் மற்றும் தலைப்பு-2
மொத்தச்சொற்கள் ½
சுருக்கிய சொற்கள் ½

VII. கடிதம் (1×5=5)

| 24. **அலுவலகக்கடிதம்;** | | 23. **உறவின்முறைக்கடிதம்** | |
|---|---|---|---|
| விடுநர் | 1/2 | இடம், நாள் | 1 |
| பெறுநர் | ½ | விளித்தல் | 1/2 |
| ஐயா | ½ | நலம் விசாரித்தல் | 1 |
| பொருள் | 1 ½ | கருத்து | 2 1/2 |
| கருத்து | | கையொப்பம் | 1/2 |
| கையொப்பம் | ½ | உறைமேல் முகவரி | 1/2 |
| இடம், நாள் | 1 | | |
| உறைமேல் முகவரி | 1/2 | | |